பக்கங்கள் 22+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 23 செவ்வாய்க்கிழமை 27.05.2025 | அதிர்வு 297

## ஐந்து மாதங்களில் வீதி விபத்துக்களால் 1,062 பேர் உயிரிழப்பு

இலங்கையில் 2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மே மாதம் 25 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் வீதி 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# காணிக் கபளீகர வர்த்தமானியை வாபஸ் வாங்கியது அநுர அரசு!

## அதை வரவேற்கின்றார் சுமந்திரன்

(என்.புவியரசன்)

“காணி அபகரிப்பு வர்த்தமானிக்கு எதிராகக் காலகெடு விதித்து நாம் வெகுஜனப் போராட்டங்கள், சட்ட மறுப்பு போராட்டங்களில் எங்களது மக்களை வழி நடத்த முயன்றபோது, அந்தக் காலக்கெடு முடியும் சமயத்தில் காணி அபகரிப்பு வர்த்தமானியை கைவாங்கும் தீர்மானத்தை அரசு எடுத்திருக்கின்றமையை வரவேற்கின்றோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 03▶

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவுக்கு

# சுமந்திரனுக்கு எதிராகத் தும்புத்தடியை நிறுத்த எண்ணுகின்றார் கஜேந்திரகுமார்

(பிரபாகரன் டிலக்சன்)

ஏனைய கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர்களின் பெயர்களைக் கருத்தில் கொண்டால் நாங்கள் ஒரு தும்புத்தடியை நிறுத்தலாம் என நினைக்கிறோம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 03▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# குச்சவெளி, மூதூர் சபைகளில் ஆட்சி அமைக்க மு.கா. - தமிழரசு புரிந்துணர்வு உடன்படிக்கை





**(எஸ்.கீதபொன்கலன்)**

குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று இன்று திருகோணமலை மாநகரில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முகம்மது சரீப் தௌபீக் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசன் ஆகியோர் கையொப்பம் இட்டனர் .

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இரண்டு கட்சியினரும் பின்வருமாறு உடன்பட்டுக் கொள்கின்றனர்.

1. குச்சவெளிப் பிரதேச சபையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர் .

2. குச்சவெளிப் பிரதேச சபையில் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர் .

3. மூதூர் பிரதேச சபையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர் .

4. மூதூர் பிரதேச சபையில் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர்.

நிதி ஒதுக்கம், நிர்வாகம், அதிகாரப் பரவலாக்கம் உள்ளிட்ட மேலும் பல நிபந்தனைகளோடு இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மூதூர் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 5 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கு 4 உறுப்பினர்களும் உள்ளனர். இதே போன்று குச்சவெளிப் பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கு 5 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 4 உறுப்பினர்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## காணிக் கபளீகர...

வடக்கில் அரசு கபளீகரம் செய்ய முற்பட்ட 5,960 ஏக்கர் நிலத்திற்கான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதாக அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொண்டமை தொடர்பில் இன்று தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் சுமந்திரன் மேலும் கூறியவை வருமாறு:-

"காணி நிர்ணயச் சட்டத்தின் கீழ் 2025 மார்ச் 28 அன்று செய்யப்பட்ட வர்த்தமானிப் பிரசுரத்தை மீளக் கைவாங்குவதாக அரசு தீர்மானித் திருப்பதாக அமைச்சரவைத் தீர்மான மாக ஓர் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இந்த வர்த்தமானிப் பிரசுரம் மார்ச் மாதம் இறுதியிலே செய்யப்பட்டாலும் பல நாள்களுக்குப் பின்புதான் அரச பிரசுரிப்பு மூலமாக தெரியவந்தது.

அதிலும் விசேடமாக ஊடக நண்பன் லோகதயாளன் இந்த வர்த்தமானி யைக் கண்டெடுத்தமையினால்தான் இது வெளிவந்தது. அப்போது ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே இது இணையத்தில் காணப்பட்டது. மே மாதம் முதலாம் திகதி ஊடகவியலாளர் 'முரசு' பத்திரிகை ஊடாக வெளியிடப்பட்டதன் பின்பே தமிழ் மொழி மூலமான வர்த்தமானியும் இணையத் தில் சேர்க்கப்பட்டது.

இந்தச் செய்தி கிடைத்த உடனேயே ஜனாதிபதிக்கு மே மாதம் 3 ஆம் திகதி நான் ஒரு கடிதத்தை எழுதினேன். அதிலே இப்படியான வர்த்தமானிப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது, இது உடனடி யாக மீள் கை வாங்கப்பட வேண்டும் என வலியுறுத்தினோம். அதற்கு முன்னதாக பல கூட்டங்களிலே பகிரங்கமாக மே மாதம் 28 ஆம் திகதி வரையில் நாம் காலக்கெடு கொடுக்கின்றோம், அதற்கு முன்பாக இந்த வர்த்தமானி மீளக் கை வாங்கப்பட வேண்டும், இல்லையேல் மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்று நடத்தப்படும் என்றும் நான் எச்சரிக்கை செய்திருந்தேன்.

இது சம்பந்தமாக பலவிதமான செய்தி கள் வெளியிடப்பட்டுள்ளன. 'நிலம் அழிந் தால் இனம் அழிந்து போகும்' என்ற அடிப் படையிலே மிக வன்மையாக நாங்கள் போராடுவதற்குத் தயாராக இருந்தோம்.

அதேவேளை பல மக்கள் சந்திப் புக்களையும் நடத்தி அந்தப் பிரதேசத் தில் வாழ்பவர்களைச் சட்டத்தரணிகளாக - 'மக்களுக்கான நீதி' அமைப்பின் சட் டத்தரணிகளாக - சந்தித்து உண்மையான நிலையையும் நாங்கள் கண்டறிந்திருக் கின்றோம்.

அதற்குப் பிறகு இன்று காலை ஜனாதி பதிக்கு நானும் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் ஒப்ப மிட்டு கடிதம் ஒன்றை அனுப்பி வைத் தோம். நான் முதலிலே அனுப்பிய கடிதத் தில் இல்லாத விடயங்களையும் சுட்டிக் காட்டி, உடனடியாக இந்த வர்த்தமானி மீளக் கை வாங்கப்பட வேண்டும், இல்லை என்றால் வெகுஜனப் போராட்டங்களி லும், சட்ட மறுப்புப் போராட்டங்களிலும் எங்களது மக்களை வழி நடத்த வேண் டியதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றோம்.

அப்படியான சட்ட மறுப்பு போராட் டங்களுக்கான ஆயத்தங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. மே 28 ஆம் திகதி கடந்தவுடன் 29 ஆம் திகதி அளவிலே பாரிய அளவிலான சட்டப் போராட்டங்கள், பகிஷ்கரிப்புக்கள், மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தத் தயார் படுத்திக்கொண்டிருந்த வேளையிலேதான் அரசு இந்தத் தீர்மா னத்தை எடுத்துள்ளது.

இதிலே ந.லோகதயாளன், 'முரசு' பத்திரிகையின் பங்களிப்போடு விட யத்தை வெளியிட்ட பிறகு நாடாளுமன்றத் திலே அது குறித்து கேள்வி எழுப்பிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இதிலே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் நாடாளுமன்றத்திலே உரையாற்றும் போது இந்தச் சட்டத்தின் தேவையையும் இந்தச் சட்டத்தைப் பிரயோகிக்கின்றபோது ஏற்படப் போகும் விளைவுகளையும் மிக நுணுக்கமாகச் சட்ட விளக்கங்களோடு தெளிவுபடுத்தினார்.

அரசு இதனைத் தொடர்ந்து 'தினக் குரல்' பத்திரிகைக்கும் சகல ஊடகங்க ளுக்கும் ஓர் அறிவிப்பை விடுத்தது. அதிலே இது தொடர்பான நடவடிக்கை களை இடைநிறுத்துகின்றோம் எனச் சொல்லியிருந்தார்கள்.

அப்போதே நான் கூறினேன், இது சட்டப்படியாக 3 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது, அதனை வேறு எந்த வழியிலும் இந்த நடவடிக்கை இடைநிறுத்த முடியாது, ஆகையினாலே வர்த்தமானியை மீளக் கை வாங்க வேண்டும் எனக் கூறினேன்.

இந்த விடயத்தில் சட்டத்தரணிகள் குழாமுக்கும் எனது நன்றிகள். நாம் போராட்டங்களை முன்னெடுக்கலாம். அதேநேரம் சமாந்தரமாக சட்ட நட வடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். அதை நாங்கள் தொடர்ந்து செய்வோம். வர்த்தமானி அறிவித்தல் கை வாங்கலை விசேடமாக வரவேற் கின்றோம். இதற்காக ஜனாதிபதிக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்." - என்றார்.

---

## சுமந்திரனுக்கு எதிராக...

இன்று யாழ்ப்பாணம் - கொக்குவி லில் அமைந்துள்ள கட்சியின் தலை மைக் காரியாலயத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய பேரவையின் ஊடக சந் திப்பு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காணி சுவீகரிப்பு வர்த்தமானி மீளப்பெறப்பட்டமைப் பாரிய வெற்றி யாகும். இந்த விடயத்தை நாடாளு மன்றம் கொண்டு சென்று அரசுக்கு மிகப்பெரிய அழுத்தத்தைப் பிரயோ கிக்க நடவடிக்கைகளை மேற்கொண் டிருந்தோம். அதற்கு ஒத்துழைப்பு வழங் கிய தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சி.சிறீதரன் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கும், வைத் தியர் அர்ச்சுனாக்கும் நன்றியைத் தெரி வித்துக்கொள்கின்றேன்.

மேலும் பிரதமருடனான சந்திப்பில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான நிஸாம் காரியப்பர் மற்றும் அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீ முக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காணி சுவீகரிப்பு வர்த்தமானிக்கு எதிராக தமிழ் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் மேற்கொண்ட நடவடிக்கை எவ் வளவு முக்கியமானது என்பதை தமிழ், முஸ்லிம் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்." - என்றார்.

இதன்போது, 'இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச் சர் வேட்பாளராக முன்னாள் நாடாளு-மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிறுத்தப்படுவார் எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில், வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் அது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன? - என்று கஜேந்திரகுமார் எம்.பியிடம் ஊடகவிய லாளர்கள் கேள்வி எழுப்பியபோது,

"மாகாண சபைத் தேர்தல் இடம்பெற் றால் நிச்சயம் நாங்கள் போட்டியிடுவோம். ஏனைய கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர்களின் பெயர்களைக் கருத் தில்கொண்டால் நாங்கள் ஒரு தும்புத் தடியை நிறுத்தலாம் என நினைக்கின் றோம்." - என்றார்.

---

## ஐந்து மாதங்களில்...

விபத்துக்களால் 1062 பேர் உயிரிழந் துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறு கையில்,

"இந்தக் காலப் பகுதியில் நாட்டில் 1003 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள் ளன.

இந்த வீதி விபத்துக்களினால் சுமார் 7 ஆயிரம் பேர் படுகாயமடைந் துள்ளனர்.

இதேவேளை, கடந்த 24 மணித்தி யாலத்துக்குள் வீதி விபத்துக்களால் 4 பேர் உயிரிழந்துள்ளனர்." - என் றார்.



# தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட சபை உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்!

**(கி.வசந்தன்)**

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள வன்னிப் பிளாசா விடுதியில் இன்று இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வவுனியாவில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வு கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் முன்னிலையில் இடம் பெற்றது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள சபைகளில் 26 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.












# பனை அபிவிருத்திச் சபை தலைவர் பதவியில் இருந்து சகாதேவன் திடீர் நீக்கம்!

(ந.லோகதயாளன்)

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன் அந்தப் பதவியில் இருந்து திடீரென நீக்கப்பட்டுள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக 2024.10.22 இல் நியமிக்கப்பட சகாதேவன் இன்று (2025.05.27) அந்தப் பதவியில் இருந்து நீக்கப் பட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் உட்கட்சி முரண் பாடு காரணமாகவே சகாதேவன் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின் றது.



වැවිලි සහ ප්‍රජා යටිතල පහසුකම් අමාත්‍යාංශය
பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
Ministry of Plantation and Community Infrastructure

11th Floor, Sethsiripaya Stage II, Battaramulla.

My No: MPCI / Admin/12/BM/PDB
Your No:
Date: 27.05.2025

Mr. Vinayagamoorthi Sakathvan
No 16/13,
Maruthady Road,
Jaffna

**Removal of the Chairman and member of the Board of Directors of the Palmyrah Development Board**

This refers to your appointment letter bearing number MPI/Admin/12/BM/PDB dated 22.10.2024.

02. Please be noted that, in order to investigate complaints and petitions against you in fair and impartial manner, you are temporarily removed from the posts of Member and the Chairman of the Palmyrah Development Board.

Samantha Vidyarathna (M.P)
Minister of Plantation and Community Infrastructure

Copies

1. Secretary to the President
2. Secretary to the Prime Minister
3. Secretary, Ministry of Finance, Planning and Economic Development
4. Auditor General

– For information please

5. General Manager, Palmyrah Development Board – For necessary actions please

# கொழும்பில் கடை ஒன்றில் தீ விபத்து!

கொழும்பு, இராஜகிரியப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் தீ விபத்து ஏற்பட் டுள்ளது.

இந்தத் தீ விபத்து இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

கோட்டை மாநகர சபையின் தீயணைப் புப் படையினர் இணைந்து தீயைகே கட் டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள னர்.

தீயைக் கட்டுப்படுத்த 4 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்ற னர்.







# நோர்வூட் பிரதேச செயலகம் இடமாற்றப்படாது

## ஜீவன் எம்.பியிடம் பிரதேச செயலர் உறுதியளிப்பு

நோர்வூட் பிரதேச செயலகம் ஹட்டன் நகருக்கு இடமாற்றம் செய்யப்படாமல், தற்போது இருக்கும் கட்டடத்திலேயே தொடர்ந்து இயங்கும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானிடம், நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் ஜி.எஸ்.டி. கம்லத் உறுதியளித்துள்ளார்.

நோர்வூட் பிரதேச செயலக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேச செயலக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஹட்டன் – டிக்கோயா நகர சபை மண்டபத்தில் (டிக்கோயா) இன்று நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான்,

"சிறுநீரக நோய் தாக்கத்துக்கான வைத்திய சேவைகளை வழங்குவதற்காக வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறைகள் நிலவுவதால் அதனை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." – என்று வலியுறுத்தினார்.

"பாடசாலை மாணவர்கள் மத்தியிலான போதைப்பொருள் பாவனையும் சமூகப் பிரச்சினையாகும். மலையகத்திலும் இந்தப் பிரச்சினை உள்ளது. இதனைத் தடுப்பதற்குப் பொலிஸார் ஊடாக நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு கண்காணிப்புக் குழு அமைத்தோம். அதில் கட்டாயமாக ஒரு பெண் பொலிஸ் அதிகாரியும் இருப்பார். அந்தச் செயற்றிட்டத்தை மீண்டும் ஆரம்பித்தால் இந்தப் பிரச்சினையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.

மேலும் எங்களது கோரிக்கையை ஏற்று நோர்வூட் பிரதேச செயலக இடமாற்றத்தை நிறுத்தியமைக்காக இந்த நேரத்தில் அரசுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்." – என்றும் ஜீவன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் ஜி.எஸ்.டி கம்லத் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், கலைச்செல்வி, ஹட்டன் – டிக்கோயா நகர சபை செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை செயலாளர், நோர்வூட் பிரதேச சபை செயலாளர், அரச நிறுவன அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், கிராம சேவகர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தார்கள்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கடைசி நேர வாய்ப்பு

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. ஏற்கனவே சுட்டிக் காட்டியபடி மழை விட்டும் இன்னும் தூவானம் ஓயவில்லை.

இந்தத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 589 வேட்பாளர்கள் மொத்தம் 8,287 உள்ளூராட்சி உறுப்பினர் பதவிகளுக்காகப் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலின் வேட்பு மனுக்களில் பெயர் சேர்க்கப்பட்ட சுமார் 67 ஆயிரத்துக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு வெற்றி வாய்ப்பு கிட்டவில்லை. ஆனால் தேர்தல் தொடர்பில் அவர்களின் பொறுப்புக்கள் இந்த வெற்றியின்மையோடு கழிந்து விடவில்லை. இன்னமும் தங்களுக்கு சில முக்கிய பொறுப்புக்கள், கடமைகள், கட்டாயக் கடப்பாடுகள் எஞ்சி இருக்கின்றமையை அந்த வெற்றி பெறாத 67 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களும், வெற்றியீட்டிய 8,287 உறுப்பினர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் முக்கிய கடப்பாடு இன்றி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டி இருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான செலவுக் குறைப்புச் சட்டத்தின் கீழ் வேட்பாளர்கள் வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு இன்று நள்ளிரவுடன் முடிவடைய உள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, இதுவரை அறிக்கைகளை சமர்ப்பிக்காத அனைத்து வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தங்கள் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை இன்று நள்ளிரவு 12 மணிக்குள் தாங்கள் போட்டியிட்ட மாவட்டத்தில் உள்ள தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

சட்டத்தின்படி, தேர்தல் முடிவடைந்த 21 நாள்களுக்குள் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆதலால், இந்தக் கால அவகாசம் எந்த வகையிலும் நீடிக்கப்படமாட்டாது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

செலவின அறிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்காக, நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலகங்களும் இன்று நள்ளிரவு 12 மணி வரை திறந்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

வேட்பாளர்கள் செலவு அறிக்கைகளை நேரடியாகச் சமர்ப்பிக்கலாம். இல்லையெனில், அதற்காக தேர்தல் ஆணையத்தால் ஒரு சிறப்பு வலைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது என்றும், அதன் ஊடாகவும் இன்று நள்ளிரவு 12 மணிக்குள் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வேட்பாளரும், அரசியல் கட்சியும் பணம் செலவழித்திருந்தாலும் இல்லாவிட்டாலும், தொடர்புடைய செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், பணம் செலவழிக்கவில்லை என்றால், அது தொடர்பான குறிப்பையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இன்று நள்ளிரவுக்குப் பிறகு செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்காதவர்கள் தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும். அத்தோடு அத்தகையோருக்கு எதிராக தேர்தல் ஆணைக்குழு எதிர்காலத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும். தேர்தல் சட்டத்தின்படி தேவையான நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் பயன்படுத்தப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்கள் அனைவரும் தங்கள் கடப்பாட்டை நிறைவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான கடைசி நேர வாய்ப்பு இது!



# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக ஆறாவது உபவேந்தராகப் பேராசிரியர் எஸ்.எம்.ஜுனைடீன்!

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஆறாவது உபவேந்தராக அதே பல்கலைக்கழகத்தின் பொறியல் பீடத்தின் பீடாதிபதியாக மூன்று முறை பணியாற்றியிருந்த பேராசிரியர் எஸ்.எம்.ஜுனைடீன், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் நியமிக் கப்பட்டுள்ளார்.

அவர் பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்தில் நேற்று (26) பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் உள்ளிட்ட பல்கலைக்கழக உயர்மட்ட அதிகாரிகள் முன்னிலையில் தனது பதவியை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரி, பேராதனை பல்கலைக் கழகம் மற்றும் ஹோங்கோங் பல்கலைக்கழகம் போன்றவற்றில் கல்வி கற்றவர். சிறந்த கல்விப் பின்புலத்தையும் நிர்வாகத் திறமையையும் கொண்டவராவார்.

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விஷேட பேரவை ஒன்றுகூடல் கடந்த மாதம் 03 ஆம் திகதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் தென் கிழக்கு பல்கலைக்கழக கூட்டமண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03 - 2023 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கோரப்பட்டுள்ளத்தான் அடிப்படையில் பேரவை



உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரைத் தெரிவு செய்தனர்.

இதன் அடிப்படையில் முதலாவதாக பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீனும் இரண்டாவதாக பேராசிரியர் ஏ.எம். றஸ்மியும் மூன்றாவதாக கலாநிதி யூ.எல்.செய்னுடீனும் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

பரிந்துரைக்கப்பட்டிருந்த மூவரில் முதலாவதாகத் தெரிவாகியிருந்த பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீனை ஜனாதிபதி சிபார்சு செய்துள்ளார்.

நிகழ்வில் கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், முகாமைத்துவ வர்த்தக பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, பொறியியல் பீடாதிபதி பேராசிரியர் எம்.ஏ.எல்.ஏ. ஹலிம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடாதிபதி அஷ் ஷேய்க் எம்.எச்.ஏ. முனாஸ், பிரயோக விஞ்ஞான பீடாதிபதி கலாநிதி எம். எச். ஹாரூன் மற்றும் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், பதில் நிதியாளர் சி.எம். வன்னியாராச்சி, பேராசிரியர்களான எம்.ஐ.எம். ஹிலால், ஏ.எல்.எம். றியால், எஸ். சப்றாஸ் நவாஸ், பிரயோக விஞ்ஞான முன்னாள் பீடாதிபதி யூ.எல். செய்னுடீன், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். சமீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்!



(அபு அலா, மட்டு. துஷாரா)

மட்டக்களப்பு - நொச்சிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் தவராசா கிருஷான் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எம்.பசீல் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.




# வட மாகாண சுற்றுலாத்துறைக்கான மேம்பாட்டு முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு!

(வாஸ் கூஞ்ஞ)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரும் பங்காற்றும் சுற்றுலாத் துறைக்கு இதுவரை காலமும் வட மாகாணத்தின் பங்களிப்பு சற்று குறைவாகவே இருந்துள்ளது. எதிர் காலத்தில் வடமாகாண சுற்றுலாத்துறை வளர்ச்சி மிக உயர்வான நிலைக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை வடக்குக்கான கைத்தொழில் துறை களின் மன்றம் முன்னெடுத்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரும் பங்காற்றும் சுற்றுலாத் துறைக்கு இதுவரை காலமும் வட மாகாணத்தின் பங்களிப்பு சற்றுக் குறைவாகவே காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் வடமாகாண சுற்றுலாத் துறை வளர்ச்சி மிக உயர்வான நிலையை அடைவதற்கான முயற்சி களை தொடர்ந்து செய்ய வேண்டியது அனைவரதும் முக்கிய தேவையாக உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு வடக் குக்கான கைத்தொழில் துறைகளின் மன்றம் தனது அங்கத்தவர்களின் தொழில் துறை வளர்ச்சியை மேம்படுத்த



எடுக்கும் பல முயற்சிகளில் ஒன்றாக, பண்டாரநாயக்க சர்வதேச ஞாப கார்த்த மாநாட்டு மண்டபத்தில் சுற்றுலா துறைசார் கண்காட்சியில் வட மாகாண சுற்றுலாத்துறையை மேம்படுத்து வதற்கான முன்மொழிவுகளை ஜனாதி பதி அநுர குமார திசநாயக்கவிடம் கையளித்தது.

கடந்த 12 வருடங்களாக தொடர்ச்சி யாக நடைபெற்று வரும் இந்தக் கண் காட்சியில் இலங்கையின் பல பாகங் களிலும் உள்ள சுற்றுலா துறையின் பங்குதாரர்களுடன் முதல் முறையாக வடக்குக்கான கைத்தொழில் துறைக ளின் மன்றம் வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தி தனது அங்கத்தவர் களின் வளர்ச்சிக்கான புதிய மைல் கல் ஒன்றை எட்டியுள்ளனர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்கள், புராதன சின்னங் கள், சுற்றுலா விடுதிகள், சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், இயற்கை காட்சிகள், கலை கலாச்சார அம்சங் கள், வடமாகாணத்தின் பாரம்பரிய உணவுகள், பொழுது போக்கு மையங் கள் போன்ற பல்வேறு அம்சங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத் தப்பட்டதுடன் நேரடி விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி அவர் களுடன் சுற்றுலா துறை அமைச்சர், சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர், அரச உயர் பிரதானிகள், ஜேர்மன் நாட்டு தூதவர் ஆகியோர் கலந்து கொண்ட னர்.




# மங்களகம பொலிஸாரால் மர நடுகை வேலைத்திட்டம்

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் நாடு முழுவதும் நடைமுறைப் படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட மங்களகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியான நுவரகல செனவெவ அருகில் மங்களகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டீ.எம்.எஸ்.கே தச நாயக்க தலைமையில் மர நடுகை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பிரிவுப் பொறுப்பதி காரி நெறிப்படுத்தலில் களுவாஞ்சிக்குடி பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.எம். ஏ.கே பண்டார உட்பட மங்கள கம பொலிஸ் நிலைய உத்தியோகத் தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மங்களகம பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட நுவரகல வனப் பகுதிகளை அழகு



படுத்தும் நோக்குடன் காட்டு வளங்க ளைப் பாதுகாக்கும் நோக்கிலும் பயன் பெறக்கூடிய வகையிலும் இந்தத் திட்டம் முன்னெக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் நடப்பட்டவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் மங்களகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாதுகாக் கப்பட்ட வனப்பகுதியான நுவரகல வனப்பகுதி பாதுகாக்கப்பட்ட வன மாகவும் யானைகள் நடமாட்டம் அதி கம் உள்ள வனமாகவும் காணப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூரில் டெங்கு தடுப்பு நடவடிக்கை முன்னெடுப்பு





**(பாறுக் ஷிஹான்)**

நிந்தவூர் பிரதேசத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ். சஹிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கு அமைய, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரிகள் வைத்தியர் திருமதி எஸ். ஜீவா இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இதற்கமைய நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிந்தவூர் அல் மஸ்லம் வித்தியாலயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு டெங்கு நோய் தடுப்பு செயற்றிட்டம் அல் மஸ்லம் வித்யாலய சுற்று வட்டாரத்தில் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் இஷட் அகமட் பங்களிப்போடு நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி எஸ். ஜீவா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம். எம.பைசால், பொது சுகாதார பரிசோதகர் ஆர். நிதுர்சன் உட்பட பாடசாலையின் மேல் வகுப்பு மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது டெங்கு நுளம்புகள் அற்ற பாதுகாப்பான பிரதேசமாக பாடசாலை சுற்றுச் சூழலை மாற்றி அமைக்கும் நோக்குடன் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பாடசாலை சூழலில் உள்ள வீடுகளுக்கு தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன. டெங்கு நுளம்பு குடம்பிகள் பெருகும் வகையில் சுற்றாடலை பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்தவர்களுக்கு எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டன.





# வாகரை பிரதேசத்தில் சேக்கிழார் குருபூசை!

(பழுவூரான்)

இந்துக் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் சிவ தொண்டர் திருக்கூட்டத்தின் ஏற்பாட்டில், கோறளைப்பற்று வடக்குப் பிரதேச செயலகம், உலக சிவனடியார்கள் திருக்கூட்டம், நடராஜர் பயிற்சி மையம் மற்றும் ஆண்டாங்குளம் பத்தினி ஆலயம் ஆகியன இணைந்து பத்தினியம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையில் சேக்கிழார் குருபூசையை நடத்தின.

அத்துடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு ஆடை வழங்குதல் மற்றும் மாணவர்களுக்கு இடையில் கலாசார போட்டியும் வைக்கப்பட்டு, வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் சிவசின்னங்கள் அணிவிக்கப்பட்டு, அன்னதானமும் வழங்கப்பட்டது.



சிவதொண்டர் திருக்கூட்டத்தின் உப தலைவர் சிவதொண்டர் மு.கருணைராசாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக இந்து கலாசா அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.காசுந்தரலிங்கம், சிவதொண்டர் திருக் கூட்டத்தின் தலைவர் சிவதொண்டன் க.கமல்ராஜ், மாவட்ட இணைப்பாளர் சிவதொண்டன் எஸ்.சுதர்சன், எஸ். பிரசன்னா மற்றும் க.பொ.த. (சாதாரண தரம்) 1990, க.பொ.த. (உயர்தரம்) 1993 நண்பர்கள் அமைப்பின் இணைப்பாளர் ஆசிரியர் எஸ்.கிருபாகரன், தமிழ் சமய பற்றாளர் சிவதொண்டன் எஸ்.பாலச்சந்திரன், ஆலய பரிபாலன சபையினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தாய்த் தமிழ் உறவுகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அத்தோடு சிவதொண்டர் திருக்கூடத்தின் 311 ஆவது பணியாக இதுவரை 53,700 தாய்த் தமிழ் உறவுகளுக்கு சிவசின்னமான உருத்திராக்கம் அணிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# உகந்த மலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை அகற்றப்பட வேண்டும்!

## அம்பாறை வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகர் தெரிவிப்பு





(பாறுக் ஷிஹான்)

தமிழர் பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் பூர்வீகங்களை அழித்தலுடன் தொடரும் ஆக்கிரமிப்புகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும். கந்த மலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை உடன் அகற்றப்பட வேண்டும்.

மனித உரிமை செயற்பாட்டாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகருமான தாமோதரம் பிரதீவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் உந்தை மலையிலுள்ள ஆலயம் அதனுடன் இணைந்த கடற்கரையிலுள்ள மலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழர் பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் பூர்வீகங்களை அழித்தலுடன் ஆக்கிரமித்தலும் அண்மைக் காலமாகத் தொடர்கின்றது.

உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் புராதன தமிழர் வாழ்வியல் ஆதாரங்களைச் சிதைப்பதும் அதை அழிப்பதும் ஆக்கிரமிப்பதும் எனும் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள இந்தப் புத்தர் சிலையானது, உகந்தை முருகன் ஆலய முன் வாயிலின் முன்பாகக் செல்லும் போது கடற்கரையில் இடது புறமாகக் காணப்படும் மலையில் கடற்படை முகாம் முன்பாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது உகந்தை முருகன் ஆலய புராதன வரலாறு கொண்ட புண்ணிய பூமியாகும். இங்கு எவ்வாறு இவர்கள் புத்தர் சிலை நிறுவலாம் எனும் கேள்விஎழுந்துள்ளது. உகந்தை மலையில் 25 அடி முருகன் சிலை நிறுவும் பணியைத் தடுத்த வன இலாகாவினரும் அரசும் ஏன் இதைத் தடுக்கவில்லை எனும் கேள்விக்குப் பதில் தர வேண்டும்.

அத்தோடு உகந்தை முருகன் ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவும் வன இலாகா, மற்றும் படையினர் புதிய பல நிபந்தனைகளையும் விதித்து ஆலய சூழலைச் சுருக்கியுள்ளனர். பல கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளனர். வள்ளிமலை போன்ற இடங்களுக்குச் செல்லவும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். இது தவிர சந்நியாசி மலையும் பறிபோகும் அபாயம் காணப்படுகிறது.

இந்தச் சிலை விவகாரமும் எமது ஒற்றுமையின்மை, இனம், மதம் என்ற எண்ணமும், பற்றும் அற்றவர்களால் அங்கு ஏற்பட்ட நிர்வாகமின்மை இடைவெளியில் ஏற்பட்டதுதான்.

இந்த இடத்தில் சிலை வைப்பதற்கான ஆயத்தமாக மலையில் பீடம் அமைத்தபோது கடந்த 2024 இல் நான் நேரில் சென்று அவதானித்ததோடு இதுபற்றி உரியவர்கள் சிலரோடு பேசினேன்.

அத்துடன் இது உகந்தை ஆலய சூழலில் நிறுவப்பட்டுள்ள இரண்டாவது புத்தர் சிலை இது. இன்னும் ஒரு சிலைக்கான பீடமும் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் சிங்களவர்கள் பலரைக் குடியேற்றும் திட்டம் மற்றும் வன இலாகாவின் செயற்பாடுகள் மற்றும் மலையில் நிறுவப்படவிருந்த 25 அடி முருகன் சிலையை நிறுவாமல் தடுத்தது அதன் பின்னர் தற்போது புத்தர் சிலை வைத்தது அதற்கு உடந்தையாக இருந்த படையினர், அதிகாரிகள் உள்ளிட்ட பல விடயங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டும்.

இந்த சிலை உடனடியாக அகற்றப்படுவதோடு இந்த அரசு எமது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.– என்றார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# நுவரெலியாவில் கடும் பனி மூட்டம் சாரதிகளுக்கு அறிவுறுத்தல் விடுப்பு

(செ.தி.பெருமாள்)

நுவரெலியா பிரதேசத்தில் இந்த நாள்களில் மழையுடன் கடும் பனி மூட்டம் நிலவுவதால் முன்னோக்கிச் செல்லும் வாகனங்களைப் பார்க்க முடியாமல் விபத்துக்கள் ஏற்படுவதால் சாரதிகள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா நகர எல்லை, ஹவா எலியா பொரலந்த உடபுஸ்ஸல்லாவ பிரதான வீதி, நானுஓயா, தலவாக்கல ஹட்டன் பிரதான வீதி, நானுஓயா ரதல்ல குறுகிய வீதி, நுவரெலியா மீபிளிமான பட்டிப்பொல அணுகு வீதிகள் போன்ற பகுதிகளில் இந்த அடர்ந்த பனிமூட்டம் காணப்படுகிறது.

இந்த நிலையில் மிகக் குறைந்த வேகத்தில் வாகனங்களைச் செலுத்துமாறு நுவரெலியா போக்குவரத்து பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாரதிகள் தமக்கு முன்னால் வரும் வாகனங்களைப் பார்க்க முடியாத நிலையில் வாகன சாரதிகள் ஒவ்வொரு வாகனத்தின் மின்விளக்குகளையும் ஏற்றுமாறும் வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.






# 542 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் உயிலங்குளத்தில் 'கிளீன் ஸ்ரீலங்கா'

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் உயிலங்குளம் 542 படைப் பிரிவின் ஏற்பாட்டில் 'கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

542 ஆவது படைப் பிரிவு அதிகாரி மேஜர் விக்டர் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு 'கிளீன் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சி திட்டம் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொது மக்கள் இராணுவத்தினருடன் இணைந்து கட்டுக்கரை குளத்தில் இருந்து இலுப்பைக் குளம் மாதோட்டம் மற்றும் மக்களின் வயல்களுக்கு நீர் செல்லும் கால்வாய் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

சுத்தம் செய்யும் பணிக்கு மன்னார் பிரதேச சபையின் ஜே.சி.பி. மற்றும் உழவு இயந்திரமும் பயன்படுத்தப்பட்டன.

திணைக்கள அதிகாரிகள் பணியாளர்கள், பாதுகாப்பு படையினர் மற்றும் பொதுமக்கள் என பலர் இணைந்து 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.





# கிழக்கின் பொன் அணிகளின் கிரிக்கெட் சிவானந்தா கிண்ணத்தைச் சுவீகரித்தது!

(பழுவூரான்)

கிழக்கின் பொன் அணிகளின் கிரிக்கெட் சமரில் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அணியை வீழ்த்தி இவ்வாண்டின் சம்பியனாக மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை அணி தேர்வாகி கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன்போது முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.



இந்த நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை அணி விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

# “உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்” அம்பாறை பயனாளிகளுக்கு காசோலைகள்!





**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம் உட்பட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு “உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்” எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சேதமடைந்த வீடுகளைத் திருத்திக் கொள்ளவும், புதிய வீடுகளை அமைத்துக் கொள்வதற்குமான ஆரம்ப கட்ட காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிகழ்வானதுஅம்பாறைமாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஐரங்கனியின் தலைமையில், கிராமிய உட் கட்டமைப்பு சமூகப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவின் நெறிப்படுத்தலிலும் நடைபெற்றது.

இதில், அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா மற்றும் மஞ்சு ரத்நாயக்க, கிழக்கு மாகாண என் .எச்.டி. பொறியியலாளர் அச்சுதன் உட்பட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

அத்துடன் அம்பாறை நகர சபைக்கு உட்பட்ட கலை கலாசார மண்டபத்தின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது. அதன் பின்னர் அந்தக் கட்டடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

# யாழ். மாவட்டத்தில் உள்ள பெண்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம்!

## அரச அதிபர் ம.பிரதீபன் சுட்டிக்காட்டு

**(த.சுபேசன்)**

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். இது நல்லதொரு எதிர்காலத்துக்கு வழிவகுக்கும் செயற்பாடாக காணப்படுகிறது என்று மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற ஊராட்சி முற்ற நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் ஊராட்சி முற்றச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையோடு மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம மற்றும் பிரதேச மட்டங்களில் தீர்க்கப்பட முடியாத அல்லது தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும் களமாக இந்த மாவட்ட ஊராட்சி முற்றம் அமைகின்றது.

கிறிசலிஸ் அமைப்பினர் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் அரசியலில் பெண்களின் வகிபாகம் ஆகியன தொடர்பில் தமது காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

கிறிசலிஸ் அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பெண் பிரதிநிதிகள் பலர் இந்த முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு சபைகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.



அவர்கள் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்கள். மக்களுக்காகக் குறிப்பாக பெண்களின் பிரச்சினைகளுக்காக அவர்கள் குரல் கொடுப்பார்கள்.

ஊராட்சி முற்றச் செயற்பாடுகளை மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தோடு மட்டும் செயற்படுத்தாது கிராம மற்றும் பிரதேச மட்டங்களுக்கும் அதனை கொண்டு செல்ல வேண்டும்.

அப்போது கிராம மட்டப் பிரச்சினைகளை கிராமத்திலேயே தீர்க்கக்கூடிய நிலை ஏற்படும்.

அதேநேரம் பெண்களுக்கு வழங்கப்படும் கல்வி மற்றும் அறிவு ஆகியன அந்த பெண் சார்ந்த சமுகத்துக்குப் பயனுள்ளதாக அமையும். ஒரு பெண் வளர்ச்சியடையும் பட்சத்தில் அவர் சார்ந்தவர்கள் முன்னேறுவார்கள். அது ஒரு வினைத்திறனான சமுகத்துக்குப் பயனுள்ளதாக அமையும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் சுயதொழிலில் முன்னேறி வருகின்றனர். தற்போது பெண்கள் அனைத்து துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துபவர்களாக மிளிர்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர்களில் 8 பேர் பெண்களாக உள்ளனர்.

பல்கலைக்கழகங்களை எடுத்துக் கொண்டாலும் சகல பீடங்களில் பெண்கள் அதிகளவில் காணப்படுகின்றனர்.

இது சமுக வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்குச் சிறந்த சான்றாகக் காணப்படுகின்றது. இருப்பினும் சில குறைபாடுகள் மற்றும் இடர்பாடுகள் இருக்கவே செய்கின்றன.

பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் அதேநேரம் தட்டிக்கழிக்கப்படும் சூழ்நிலைகளும் உள்ளன. அவ்வாறான பிரச்சினைகளை இயன்ற வரை தீர்த்து ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார்.



# உகந்தமலை முருகன் ஆலயத்தின் ஆடிவேல் திருவிழா ஜுலை 25 இல்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந் தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஜுலை மாதம் 25 ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகவுள்ளது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்தை மலை ஸ்ரீமுருகன் ஆலய கொடியேற்றம் எதிர்வரும ஜுலை மாதம் 25 ஆம் திகதி ஆலய பிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 16 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# திருகோணமலை நிலாவெளி கடற்கரையில் சிரமதான நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

நிலாவெளி பிரதேச சுற்றுலா கடற்கரையைச் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட ஹோட்டல் சங்கத்துடன் கிராம மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம், பெருங்கடல் மீனவர் சங்கம், நன்னீர் கலப்பு சங்கம் மற்றும் நிலாவெளி உல்லாச பயணியின் படகு சங்கம் உள்ளிட்ட பல அமைப்பினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், நிலாவெளி சுற்றுலா தளத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்தவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது நிலாவெளி கடற்கரையானது அதிகளவான வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகளைக் கவரக் கூடியது. இங்கிருந்தே புறாத் தீவை நோக்கியும் அதிக பயணிகள் செல்கின்றனர். இதனால் கடற்கரையைச் சுத்தம் செய்வதால் சிறந்ததொரு சுற்றுச் சூழலை உருவாக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் சுற்றுலா சங்க தலைவர், குச்சவெளி – நிலாவெளி பொலிஸ் பொறுப்பதிகாரிகள், வெளிநாட்டவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்





# மலையகப் பகுதியில் கனமழை, காற்று மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

**(க.கிஷாந்தன்)**

மத்திய மலைநாட்டு பகுதியில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை மற்றும் வீசும் பலத்த காற்று காரணமாக போக்குவரத்துகள் ஸ்தம்பித மடைந்துள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்று (27) அதிகாலை ஹட்டன் செனன் பகுதியில் பிரதான வீதியில் பல மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

இதனால் பிரதான வீதியில் விழுந்த மரங்களை ஹட்டன் பொலிஸ் அதிகாரிகளும், பிரதேச மக்களும் இணைந்து வெட்டி அகற்றினர். எனினும், இந்த வீதியினூடான போக்குவரத்து ஒரு வழிப்பாதையாக மட்டுமே மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஹட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியில் உள்ள டிக்கோயா பகுதியில் பல பெரிய மரங்கள் பிரதான வீதியில் முறிந்து விழுந்துள்ளதோடு, வீதியோரங்களில் அமைந்துள்ள பல மின்சாரம் மற்றும் தொலைபேசி கம்பங்கள் சேதமடைந்துள்ளன.

ஹட்டன் வனராஜா தோட்டப் பகுதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்ததில், மூன்று வீடுகளின் கூரைகள் மற்றும் சமையலறை சுவர்கள் என்பன சேதமடைந்துள்ளன.

தற்போது வீசும் பலத்த காற்று காரணமாக, மரங்கள் மற்றும் மரக்கிளைகள் உயர் மின்னழுத்த மின் கம்பிகளில் விழுந்துள்ளதால் ஹட்டன், நோர்வூட், கொட்டகலை மற்றும் நோட்டன்பிரிட்ஜ் ஆகிய பகுதிகளில் முழுமையான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின் தடை ஏற்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹட்டன் மின்சார வாடிக்கையாளர் சேவை மைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நுவரெலியா பகுதியில் பெய்த கனமழையுடன் கூடிய பலத்த காற்று காரணமாக பெரியளவிலான சைப்ரஸ் மரங்கள் முறிந்து விழுந்ததால், இன்று அதிகாலை நுவரெலியா – பதுளை பிரதான வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வீதிகள் மற்றும் சிறிய வீதிகளில் வாகனம் செலுத்தும் போது எச்சரிக்கையுடன் வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளுக்கு எச்சரித்துள்ளனர்.

### நியமனம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து

# ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக மாங்காய் வியாபாரத்தில் பட்டதாரி!

**(அபு அலா, ஏ.எச். ஹஸ்பர்)**

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த இளம் பட்டதாரி ஒருவர் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்பாக நேற்று (26) தனது பட்டத்தை மாம்பழக் கூடையில் வைத்துக்கொண்டு மாம்பழ வியாபாரத்தில் ஈடுபட்டு தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் பட்டம் பெற்ற அவர், தனக்கு இது வரையில் எந்தத் தொழிலும் கிடைக்கவில்லை என்றும், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தர படிப்பை பூர்த்தி செய்தவர்களுக்கு இலங்கை அரசு தொழில் வழங்கி வருகின்றன என்றும் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

பல்கலைக்கழகம் சென்று பட்டம்பெற்ற எங்களுக்கு எந்தத் தொழிலையும் வழங்க அரசு முன்வரவில்லை. இது எந்த விதத்தில் நியாயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தர படிப்பை பூர்த்தி செய்தவர்களுக்கு அரச தொழில் மிக சுலபமாக கிடைக்கின்றன. அவ்வாறனவர்களுக்கு தொழில் வழங்கும் செயற்பாட்டில் அதிக முக்கியத்துவத்தை அரசு கொடுப்பதாகச் சொல்லியிருந்தால், நாங்கள் பல்கலைக்கழகத்துக்குச் சென்று ஏன் பட்டம் பெறவேண்டும்?

எங்களின் பணத்தையும், ஐந்து வருடங்களையும் அநியாயமாக செலவு செய்திருக்கமாட்டோம். பட்டம் வைத்திருக்கும் நாங்கள் மாம்பழம் மற்றும் மீன் வியாபாரிகளாக தொழில் செய்யவேண்டிய நிலைமைக்கு இன்று ஆளாகியுள்ளோம்.

அரசே எங்களின் பட்டத்துக்குத் தொழில் தரவேண்டும். அல்லது எங்களின் பட்டத்தை மீளப்பெற வேண்டும் என்றே நான் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன்.– என்று அவர் தெரிவித்துள்ளார்.





# மாற்றுத் திறனாளிகளின் சுயதொழிலை மேம்படுத்துவது தொடர்பான பயிற்சி நெறி

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளின் சுயதொழிலை மேம்படுத்துவது தொடர்பான பயிற்சி நெறி இடம்பெற்றது.

பயிற்சி நெறி இன்று (27) மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் சுயதொழில் உற்பத்திகளை அதிகரித்தல், அவற்றுக்கான தரத்தை உயர்த்துதல், உரிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அத்துடன் மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்த பயிற்சிநெறி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைபள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வரும் மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டு தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் மற்றும் சவால்கள் தொடர்பிலும் கருத்துக்களை வழங்கினர்.



# நுளம்புக் குடம்பிகளுடன் இனங்காணப்பட்ட 1,470 இடங்களுக்கு எதிராக நடவடிக்கை!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

நாட்டில் நுளம்புக் குடம்பிகளுடன் இனங்காணப்பட்ட ஆயிரத்து 470 இடங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மே 09 முதல் 24 வரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டத்தின் போதே குறித்த இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

விசேட நுளம்பு ஒழிப்பு வாரத்தின் போது, 128,824 வளாகங்கள், 119,677 வீடுகள், 257 பாடசாலைகள், 304 பிற கல்வி நிறுவனங்கள், 789 அரசு அலுவலகங்கள், 5,025 தனியார் நிறுவனங்கள், 700 கட்டுமான தளங்கள், 195 தொழிற்சாலைகள், 263 பொது இடங்கள் மற்றும் 514 மத வளாகங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இதன்போது, 31,145 நுளம்பு இனப்பெருக்கம் ஏற்படக் கூடிய இடங்கள் இனங்காணப்பட்டது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதில், பாடசாலைகள் போன்ற பொது இடங்கள், கட்டுமான தளங்கள் நுளம்புகள் பெருகும் இடங்களைக் கொண்டிருந்தன.

ஆய்வு செய்யப்பட்ட 257 பாடசாலைகளில் 132 பாடசாலைகளில் நுளம்புகள் பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டன.

ஆய்வு செய்யப்பட்ட வீடுகளில் நான்கில் ஒரு பங்கு வீடுகளிலும் இதுபோன்ற இடங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

நுளம்பு முட்டைகள் உள்ள 6,777 வளாகங்கள் இதன்போது இனங்காணப்பட்ட நிலையில், 15 மாவட்டங்களில்,சுமார் 4,000 இடங்களுக்கு சுகாதார அதிகாரிகள் சிவப்பு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

தென்மேற்கு பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில், எதிர்காலத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், இது குறித்து கவனம் செலுத்துமாறு சுகாதார அமைச்சு பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை டெங்கு மற்றும் சிக்குன்குனியா தொற்றுக்கள் கணிசமாக அதிகரித்துள்ள போதிலும், கொழும்பு மாநகராட்சி பகுதிக்குள் உள்ள பல அரச நிலங்கள், நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்ற இடங்களாக மாறிவிட்டன என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# மின்கட்டணத்தை அதிகரித்து மக்களை வறுமைக்குள் தள்ள முயல்கிறது அரசு!

## மின் கட்டணம் அதிகரிக்கக் கூடாது!!
## அனல்மின் மாபியாவிடமிருந்து நாட்டை மீளுங்கள்!!!

### உலக கனசதுர சங்க அமைப்பின் இணைப்பாளர் அனுசியா ஜெயகாந்த் சுட்டிக்காட்டு




மின்கட்டணத்தை அதிகரித்து மக்களை மீண்டும் வறுமைக்கு உள்ளாக்க அரசு முயலக் கூடாது. சூரிய மின் உற்பதி, காற்றாலை மின் உற்பத்தி, நீர் மின் உற்பத்தி ஆகிவவற்றை மேம்படுத்த சிறந்த பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். அனல்மின் மாபியாவின் பிடியிலிருந்து நாட்டை மீட்பது அவசியம்.

சுற்றிவர கடலிருந்தும் உப்பு இறக்குமதி செய்வதைப் போலவே நாடு முதும் நீர், காற்று, சூரிய ஒளி என இயற்கை வளங்கள் இருந்தும் அனல் மின் உற்பத்தியிடம் நாடு சரணாகதி ஆகியிருக்கின்றது.

இவ்வாறு உலக கனசதுர சங்க அமைப்பின் இலங்கைக்கான நிகழ்ச்சி இணைப்பாளர் அனுசியா ஜெயகாந்த் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார சபையால் முன்மொழியப்பட்ட 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சார கட்டண திருத்தம் தொடர்பான மாற்றுப் பரிந்துரை குறித்து பொது மக்களிடம் கருத்துக் கோரும் நடவடிக்கை இன்று (27) யாழ்ப்பாணத்தில் இடம்பெறறது.

இதில் கலந்துகொண்டு அனுசியா ஜெயகாந்த் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்தும் வரி குறைக்கப்படும். விலை குறையும் என்றார்கள் ஆட்சியாளர்கள்.

எதற்காக மீண்டும் மின்சார கட்டணத்துக்கு 18 வீதத்துக்கும் அதிக உயர்வு. இதில் என்ன நியாயம் இருக்கின்றது. துறைசார் விற்பனரே இதற்கு பதில் சொல்லவேண்டும்.

இதேவேளை, நாட்டில் ஆட்சி மாற்றம் மட்டுமே மாற்றமாக ஏற்பட்டுள்ளதே தவிர பொருளாதார நெருக்கடியோ வழங்கிய வாக்குறுதிகளோ நிறைவு செய்யப்படவில்லை. மக்கள் ஏமாற்றப்பட்டதே மிச்சமாக உள்ளது.

இந்த நிலையில், மக்களின் மீது மீண்டும் மின் கட்டண அதிகரிப்பு என்ற சுமை சுமத்தப்படுகிறது. அது தொடர்பில் இங்கு ஆலோசனை செய்ய ஒன்றுகூடியுள்ளது நகைப்புக்குரியது.

நாட்டின் இயற்கை வளத்தால் நிறைவு செய்யும் உற்பத்தி செய்யக் கூடிய ஏதுநிலை இருந்தும் உலக வங்கியின் நிகழ்ச்சி நிரலுக்காக குறைக்க வேண்டிய மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்காக ஆராய்கின்றோம் என்பதே உண்மை நிலைமையாக உள்ளது.

வலுவான பொறிமுறைகள் இன்றி தள்ளாடும் இலங்கையின் திட்டமிடல்களுள் இது நிர்ப்பந்த உயர்வாகவே அமைகின்றது. ஆனாலும் இந்தக் கட்டண உயர்வை ஏற்க முடியாது.

இது மக்களை மேலும் வறியவர்களாக்கும். சிறுதொழில் முயற்சியாளர் மட்டுமல்லாது விவசாயிகள், பெரும் நிறுவனங்களும் செயலிழக்கும் நிலையை உருவாக்கும் என்பதே உண்மை.

இலங்கையில் தற்போது சூரிய மின் உற்பத்தி, காற்றாலை மின் உற்பத்தி, நீர் மின் உற்பத்தி என்று இயற்கை வடிவில் குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் ஏதுனிலை இருக்கும் போது ஏன் அனல் மின் உற்பத்திக்கு ஊக்குவிப்பும் அதில் தங்கி இருக்கும் நிலையிலும் எமது நாடு இருக்கின்றது. இதை ஏன் வல்லுனர்கள் சிந்திப்பதாக இல்லை. இதற்கு தீர்வு காணப்படுதல் அவசியம்.

ஆட்சியில் தற்போது இருக்கும் அரசு ஆட்சிக்கு வர முன்னர் கூறியது, கடந்த அரசுகள் ஊழல் மோசடி செய்தன என்று. ஆனால் இன்று ஆட்சிக்கு வந்த அவர்களால் ஏன் கட்டணங்களை குறைக்க முடியாதுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு அரசாங்கம் பணிந்து விட்டதா? அல்லது இவர்களும் ஊழல் செய்கின்றார்களா? அல்லது கடந்த ஆட்சியாளர் மேல் இவர்கள் பொய் குற்றம் சுமத்தி உண்மையை மறைத்து மக்களை ஏமாற்றினார்களா? என்ற சந்தேகம் மக்களிடம் எழுகின்றது. இதேவேளை மின்சாரம் என்பது மக்களின் அடிப்படை தேவைகளுள் ஒன்று.

மக்களின் இந்த அடிப்படைத் தேவையை வைத்து அரசியல் செய்வது நல்லதாகாது. இதேவேளை ஏற்கனவே கட்டண உயர்வுக்கான முடிவை எடுத்துவிட்டு கண்துடைப்புக்காக இப்போது கருத்துக் கேட்பதும் ஊழல் தான். இதற்கும் மக்களின் வரியே அரச நிதியாக செலவாகின்றது. அத்துடன் வறிய மக்களை உழைப்பை மேலும் சுரண்டும் செயலாகவும் இது அமையும். இது ஒருபுறம் இருக்க, தற்போது எங்கு பார்த்தாலும் சூரிய மின் உற்பத்திக்கான கட்டமைப்புகள் முளைக்கின்றன.

ஆனால் அந்த மின்சாரத்தை பிரதான கட்டமைப்பில் இணைப்பதில் மின்சார சபை செய்யும் குளறுபடியும் ஆயிரம் அரசியலும் நடக்கின்றன. சுற்றிவர கடலிருந்தும் உப்பு இறக்குமதி செய்வதைப் போலவே நாடுமுழுதும் இயற்கை வளங்கள் இருதும் அதைப் பயன்படுத்தாது அனல் மின் உற்பத்தியிடம் நாடு சரணாகதியாய் இருப்பது வெட்கக்கேடாகும்.

இந்த கருத்துக் கேட்கும் முயற்சியில் மின்கட்டணம் அதிகரிக்க கூடாது, மக்களை மீண்டும் வறுமைக்கு உள்ளாக்க கூடாது என்பதை எனது பதிவாக முன்வைப்பதுடன் சூரிய மின் உற்பதி, காற்றாலை மின் உற்பத்தி, நீர் மின் உற்பத்தி ஆகிவவற்றை மேம்படுத்த சிறந்த பொறிமுறை வகுக்கப்பட்டு அனல்மின் மாபியாவின் பிடியிலிருந்து நாட்டை மீட்பது அவசியம் என்றும் வலியுறுத்துகின்றேன்.- என்றார்.



# சகோதரிகளின் குங்குமத்தை அழித்தால் கட்டாயம் நாம் பழிவாங்குவோம்

## பிரதமர் மோடி எச்சரிக்கை

இந்திய சகோதரிகளின் குங்குமத்தை (சிந்தூர்) அழிக்கும் எந்தவொரு முயற்சியும் தவிர்க்க முடியாத பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குஜராத்தின் தாஹோத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி,

"நமது சகோதரிகளின் குங்குமத்தை அழிக்க யாராவது துணிந்தால், அவர்களின் முடிவு நிச்சயம். அதனால்தான் ஆப்ரேஷன் சிந்தூர் என்பது வெறும் இராணுவ நடவடிக்கை அல்ல, இது நமது இந்திய மதிப்புகள் மற்றும் நம் இதயங்களில் நாம் வைத்திருக்கும் ஆழமான உணர்வுகளின் பிரதிபலிப்பாகும்.

அவர்கள் 140 கோடி இந்தியர்களுக்கு சவால் விடுத்தார்கள். அதனால்தான் நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்ததை நான் சரியாகச் செய்தேன். மோடி தனது மூன்று படைகளுக்கும் சுதந்திரம் வழங்கினார். மேலும், நமது துணிச்சலான வீரர்கள் கடந்த பல தசாப்தங்களாக உலகம் கண்டிராததைச் செய்தார்கள். நமது துணிச்சலான வீரர்கள் ஏப்ரல் 22 அன்று அவர்களின் தவறான பஹல்காம் சம்பவத்துக்கு பதிலளிக்கும் விதமாக, அவர்களின் மிகப் பெரிய பயங்கரவாத முகாமை வெறும் 22 நிமிடங்களில் அழித்தனர்.

இந்தியாவின் இந்த நடவடிக்கையால் பாகிஸ்தான் இராணுவம் கிளர்ச்சியடைந்து துணிச்சலைக் காட்டியபோது, நமது படைகள் பாகிஸ்தான் இராணுவத்தையும் தோற்கடித்தன. பயங்கரவாதத்தை உற்பத்தி செய்யும் நாடாக பாகிஸ்தான் இருக்கிறது. பிரிவினைக்குப் பிறகு, புதிதாக உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் நாட்டுக்கு ஒரே ஒரு குறிக்கோள் மட்டுமே இருந்தது. இந்தியாவை வெறுத்து, நமது முன்னேற்றத்தைத் தடுக்க முயற்சிப்பதுதான் அது.

ஆனால், நமக்கு ஒரே ஒரு குறிக்கோள் மட்டுமே உள்ளது. தொடர்ந்து முன்னேறுவது, வறுமையை ஒழிப்பது மற்றும் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவது. நமது ஆயுதப் படைகள் வலுவாக இருக்கும்போது மட்டுமே உண்மையிலேயே வளர்ந்த இந்தியா சாத்தியமாகும், அதேபோல் நமது பொருளாதாரமும் அப்போதுதான் வளரும். அந்த திசையில் நாங்கள் தொடர்ந்து முழு அர்ப்பணிப்பு மற்றும் உறுதியுடன் செயல்பட்டு வருகிறோம்." என்று தெரிவித்தார்.






# சீன உதவியுடன் அணு ஆயுதத்திறனை மேம்படுத்தி வருகின்றது பாகிஸ்தான்

## அமெரிக்க உளவு அமைப்பு இந்தியாவிற்கு எச்சரிக்கை

சீனா உதவியுடன் தனது அணு ஆயுதத்திறனை பாகிஸ்தான் மேம்படுத்தி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் அமெரிக்க உளவு அமைப்பு இந்தியாவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நெடுங்காலமாக எல்லை பிரச்னை நீடித்து வருகின்றது.

குறிப்பாக, இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சல பிரதேசம் மீது சீனா தொடர்ந்து உரிமைகோரி வருகின்றது.

இந்தநிலையில், இந்தியாவுடனான போரை தொடர்ந்து தனது அணு ஆயுதத்திறனை சீனா உதவியுடன் பாகிஸ்தான் மேம்படுத்தி வருவதாக, அமெரிக்க உளவு அமைப்பு தெரிவித்துள்ளது.

தங்களை முழுமையும் அழித்துவிடக்கூடிய எதிரியாக இந்தியாவை பாகிஸ்தான் கருதுவதாகவும் அமெரிக்க பாதுகாப்புக்கான உளவுத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களையும் தொழில்நுட்பங்களையும் சீனாவிடம் இருந்து பாகிஸ்தான் வாங்கி வருவதாகவும் ஹொங்கொங், சிங்கப்பூர், துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் வழியே இப்பொருள்கள் வருவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிடம் மரபுசார்ந்த படைபலம் வலிமையாக இருப்பதால் அதை அணு ஆயுதங்கள் மூலமே எதிர்கொள்ள முடியும் என பாகிஸ்தான் கருதுவதாகவும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளாடிமிர் புடின் குறித்து ட்ரம்ப் கடும் விமர்சனம்

## பதில் வழங்கியது ரஷ்யா



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்வைத்த விமர்சனத்திற்கு ரஷ்ய தரப்பிலிருந்து பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், புடின் முற்றிலும் பைத்தியமாகிவிட்டார் என ட்ரம்பின் கோபம் மிகுதியாக உணர்ச்சிவசப்பட்டதன் காரணமாக தெரிவித்து இருக்கலாம் என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகை குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், உக்ரைன் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க உதவியதற்காக அமெரிக்கத் தலைவருக்கு ரஷ்யா நன்றி தெரிவித்துள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மீது இதுவரை இல்லாத மிகப்பெரிய வான் வழித் தாக்குதலை நடத்தியதன் மூலம் புடின் முற்றிலும் பைத்தியமாகிவிட்டார் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

மேலும். ரஷ்யா மீதான புதிய தடைகளை நடைமுறைக்கு கொண்டுவர இருப்பதாகவும் அவர் தெரிவித்ததுடன் கூடவே உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியையும் அவர் கடுமையாக விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்பளப் பிரச்சினை காரணமாக ஹமாஸ் அமைப்புக்குள் முறுகல்

ஹமாஸ் அமைப்பினருக்கு பல மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. இதன்காரணமாக அந்த அமைப்பின் தலைமைக்கு எதிராக ஹமாஸ் அமைப்பினர் போர்க்கொடி உயர்த்தி உள்ளனர்.

இஸ்ரேலின் காசா, மேற்குகரை பகுதிகளில் பாலஸ்தீனர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இதில் மேற்குகரை பகுதியை, ஃபத்தா என்ற கட்சி ஆட்சி செய்து வருகிறது. இந்த ஃபத்தா அரசு பெரும்பாலும் இஸ்ரேல் அரசுடன் இணக்கமுடன் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் ஃபத்தா கட்சியே காசா பகுதியையும் ஆட்சி செய்து வந்தது. கடந்த 2007 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஹமாஸ் அமைப்பு காசாவில் ஆட்சியைக் கைப்பற்றியது. அப்போதுமுதல் காசா பகுதி ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே மிக நீண்ட காலமாக மோதல் நீடித்து வந்தது. கடந்த 2023 ஆம்ம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் பகுதிகள் மீது ஹமாஸ் அமைப்பினர் மிகப்பெரிய தாக்குதலை நடத்தினர். இதில் 1,195 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதியாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து காசா மீது இஸ்ரேல் இராணுவம் நேரடியாக போர் தொடுத்தது. ஹமாஸின் அரசியல் தலைவர்கள், இராணுவ தளபதிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். இஸ்ரேல் இராணுவ தாக்குதல்களில் காசாவின் பெரும்பாலான பகுதிகள் பேரழிவை சந்தித்து உள்ளன.

கடந்த 2023 இற்கு முன்பு ஹமாஸ் அமைப்பில் 30,000 பேர் இருந்தனர். தற்போது அந்த அமைப்பில் 15,000 பேர் மட்டுமே உள்ளனர்.ஆயிரக்கணக்கான ஹமாஸ் உறுப்பினர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். ஏராளமானோர்



அந்த அமைப்பில் இருந்து விலகி விட்டனர்.

ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு அவரவர் பதவிக்கு ஏற்ப இந்திய ரூபா மதிப்பில் 20,000 ரூபா முதல் 50,000 ரூபா வரை மாத சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. இதேபோல காசா ஆட்சி நிர்வாகத்தை கவனித்து வந்த அரசு ஊழியர்களுக்கும் இதே அளவு சம்பளம் வழங்கப்பட்டு வந்தது.

இஸ்ரேலின் இராணுவத்தின் போரால் காசா பகுதியின் பொருளாதாரம் முழுமையாக சீர்குலைந்து உள்ளது. ஈரான், கட்டார், துருக்கி உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஹமாஸ் அமைப்புக்கு பெருமளவு நிதியுதவி கிடைத்து வந்தது. அமெரிக்கா, இஸ்ரேலின் அதிதீவிர நடவடிக்கைகளால் இந்த நாடுகளில் இருந்து ஹமாஸ் அமைப்புக்கு நிதியுதவி கிடைப்பது முற்றிலுமாக தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

இதன்காரணமாக ஹமாஸ் உறுப்பினர்கள் மற்றும் அந்த அமைப்பின் அரசு ஊழியர்களுக்கு பல மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. நிதி நெருக்கடியால் ஹமாஸ் அமைப்பில் புதியவர்களை சேர்க்க முடியவில்லை. போதிய நிதி ஆதாரம் இல்லாததால் ஆயுதங்களை கொள்முதல் செய்யவும் முடியவில்லை. மாதக்கணக்கில் சம்பளம் கிடைக்காத நிலையில் ஹமாஸ் அமைப்பினர் தங்கள் தலைமைக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி உள்ளனர்.

இதுகுறித்து மத்திய கிழக்கு பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிடுகையில், "அரபு நாடுகள், கிழக்கு ஆசியா, மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஹமாஸ் அமைப்புக்கு பெருமளவு நிதியுதவி கிடைத்து வந்தது. குறிப்பாக ஈரான், கட்டார், துருக்கி நாடுகளில் இருந்து ஹமாஸுக்கு மாதந்தோறும் பெரும் தொகை கிடைத்து வந்தது.

இஸ்ரேல் போர் தொடங்கியபிறகு ஹமாஸுக்கு கிடைத்து வந்த சர்வதேச நிதியுதவிகள் படிப்படியாக தடுத்து நிறுத்தப்பட்டன. தற்போது அந்த அமைப்பு கடும் நிதி நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. ஏறத்தாழ திவாலான நிலையில் இருக்கிறது.

கடந்த பல மாதங்களாக ஹமாஸ் உறுப்பினர்கள் மற்றும் காசாவில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு சொற்பமான தொகை மட்டுமே சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது. கடந்த 3 மாதங்களாக முழுமையாகவே சம்பளம் வழங்கப்படவில்லை. இதனால் ஹமாஸ் அமைப்பினர் விரக்தி அடைந்து உள்ளனர். அவர்கள் தங்கள் தலைமைக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி உள்ளனர்.

தற்போதைய நிலையில் ஐ.நா. சபை வழங்கும் கோதுமை மற்றும் நிவாரண பொருள்களை ஹமாஸ் அமைப்பினர் சட்டவிரோதமாக பறித்து வாழ்ந்து வருகின்றனர். இதனால் காசா பகுதியை சேர்ந்த அப்பாவி மக்களுக்கு உணவு, நிவாரண பொருள்கள் கிடைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

இதனிடையே காசா பகுதிக்கு நிவாரண பொருள்களை கொண்டு செல்வதை இஸ்ரேல் இராணுவம் பல்வேறு வகைகளில் தடுத்து வருகிறது. சில ஐரோப்பிய நாடுகளின் அழுத்தம் காரணமாகவே அப்பகுதி மக்களுக்கு குறைந்தபட்ச நிவாரண உதவிகள் கிடைத்து வருகின்றன." என்று தெரிவித்துள்ளன.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 27/05/2025

## தனது 87 ஆவது வயதில் பட்டம் பெற்றார் மூதாட்டி

கனடாவில் தனது 87 ஆவது வயதில் பட்டம் பெற்று மூதாட்டியொருவர் சாதனை படைத்துள்ளார்.

87 வயதான லூயிஸ் ஃப்ரேசர் என்ற மூதாட் 03▶





# தாய்பால் ஊட்டிக் கொண்டே மரதன் ஓடி வென்ற கனடிய தாய்

பிள்ளைக்கு தாய்ப்பால் ஊட்டிக் கொண்டே மரதன் ஓட்டப் போட்டியில் வென்ற கனடிய பெண் ஒருவர் பற்றிய தகவல் அனைவரின் பாராட்டைப் பெற்றுக்கொண்டுள்ளது.

புதிய தாய்மார்களுக்கு தங்களை மீண்டும் மனிதராய் உணரச் செய்பவைகளை செய்ய வேண்டும் என்ற வாசகத்துடன், ஒரு கனடா மனித உரிமை வழக்கறிஞரும் அல்ட்ரா மரதன் ஓட்டபோட்டியாளருமான ஸ்டெபனி கேஸ், இந்தசாதனையை நிலைநாட்டியுள்ளார். 02▶



# கடவுச்சீட்டு அலுவலங்களில் ஆள்குறைப்பு நடவடிக்கை

கனடிய கடவுச்சீட்டு அலுவலகங்களில் ஆள்குறைப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள், கனடா முழுவதிலும் உள்ள கடவுச்சீட்டு அலுவலகங்களில் பணியாற்றும் சுமார் 800 தற்காலிக ஊழியர்களின் பணிகள் முடிவுக்கு வரவிருக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு கோரிக்கைகள் குறைவடையும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், Service Canada தன் பணியாளர்களின் எண்ணிக்கையை



குறைக் கிறது.

“இந்த முடிவு எளிதில் எடுக்கப்படவில்லை. அரசு துறையாக, எதிர்பார்க்கப்படும் வேலைச்சுமை அடிப்படையில் நிதி மேலாண்மை சீராக நடைபெற வேண்டும். வருமானம் மற்றும் செலவுகள், குறிப்பாக ஊழியர்களுக்கான சம்பளச் செலவுகள் ஆகியவை சமமாக இருக்க வேண்டும்” என்ற காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நிர்வாகம் அறிவித்துள்ளது.

கனடா அரசுத் துறையில் வேலை வாய்ப்புகள் கடந்த காலங்களில் 9,800 இற்கும் மேல் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்லும் கனேடியர்கள் எண்ணிக்கை வீழ்ச்சி

கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விடுத்துவரும் மிரட்டலால் அமெரிக்காவுக்கே இழப்பு ஏற்பட்டுள்ளது.

கனடா மீது கூடுதல் வரிகள், கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக மிரட்டல் என கனடாவுக்கு தொடர்ந்து தொல்லை கொடுத் துவருகிறார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில், கனடாவின் புதிய பிரதமரான மார்க் கார்னி, உள்நாட்டு வர்த்தகத்துக்கும் உள்நாட்டு சுற்றுலாவுக்கும் ஆதரவளிக்குமாறு கனேடிய மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மார்க் கார்னியின் செய்தியை கனேடியர்கள் பலர் பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.

2025ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் வீதி மார்க்கமாக அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்லும் கனேடியர்கள் எண்ணிக்கை 35.2 சதவிகிதம் குறைந்துள்ளது.

ஆகாய மார்க்கமாக அமெரிக்கா செல்லும் கனேடியர்கள் எண்ணிக்கையும் 20 சதவிகிதம் குறைந்துள்ளது.

முக்கிய விடயம் என்னவென்றால், கனேடியர்கள் அமெரிக்காவை புறக்கணிப்பதன் விளைவை அமெரிக்கா அனுபவிக்கத் துவங்கிவிட்டதாக பயண நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்க விமான நிலையங்கள், ஹொட்டல்கள் மற்றும் எல்லையிலுள்ள கடைகளுக்கு கனேடிய டொலர்கள் வடிவில் வரும் வருவாய் பெருமளவில் குறைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அதே நேரத்தில், கனடாவின் சுற்றுலாத்துறைக்கு வருமானம் கணிசமாக அதிகரித்துவருகிறது. 2020 இற்கு முன், அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்வதில் முக்கிய இடம் பிடித்தவர்கள் கனேடியர்கள் என்ற நிலை இருந்தது.

ஆகவே, தற்போது கனேடியர்கள் அமெரிக்காவை புறக்கணிப்பதால் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை அமெரிக்கர்களால் நன்கு உணர முடிகிறது.

கனேடியர்களின் அமெரிக்க புறக்கணிப்பு, நீண்ட காலத்துக்கு நீடிக்கக்கூடும் என்கிறார்கள் துறைசார் வல்லுநர்கள்.

## தாய்பால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையா வெயில்ஸில் நடைபெற்ற Ultra-Trail Snowdonia என்ற 100 கிலோ மீற்றர் ஓட்டபோட்டியில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றி, கேஸ் உடன் சென்ற 6 மாத குழந்தை பெப்பரை நடுவே பாலூட்டிக் கொண்டு ஓட்டத்தில் பங்கேற்றும் வெற்றி பெற்றுள்ளார்.

"நான் இந்த ஓட்டப்போட்டியில் பதிவு செய்தது குழந்தை பிறப்புக்குப் பிறகு தான். ஜூலை மாதத்தில் கொலராடோவில் 100 மைல் ஓட்டத்துக்கு நான் தயார் ஆகவேண்டியிருந்தது.

அதற்காக ஒரு பயிற்சி ஓட்டமாக இதை எடுத்தேன்," என ஸ்டெபனி கேஸ் கூறினார். கிங்ஸ்டனில் பிறந்து, டொரொண்டோ மற்றும் ஓக்வில்லில் வளர்ந்த ஸ்டெபனி, தற்போது பிரான்சில் வசிக்கிறார்.

இவர் ஒரு "அல்ட்ராரன்னர்" என்ற அடையாளத்துடன், ஒரு மனித உரிமை வழக்கறிஞராகவும் பணியாற்றுகிறார். கர்ப்பங்கள் கலைந்தமை மற்றும் IVF சிகிச்சைகளில் எதிர்கொண்ட சவால்களினால் மூன்று ஆண்டுகள் ஓட்டத்தில்



இருந்து விலக நேரிட்டதாக அவர் கூறுகிறார்.

தொடர்ந்து பயிற்சி இல்லாமலேயே, மற்ற சிறந்த ஓட்டபோட்டியாளர்களைவிட 30 நிமிடங்கள் தாமதமாக தொடங்கியபோதும், அவர் 16 மணி 53 நிமிடங்கள் 22 விநாடிகளில் ஓட்டத்தை வென்று முதலிடம் பிடித்துள்ளார்.

தனது பேச்சில், "நான் வெற்றியாளராக மாறுவேன் என்ற எதிர்பார்ப்புடன் ஓடவில்லை. ஆனாலும் நான் இப்போது எனக்கே பெரிய இலக்குகளை அமைக்க விரும்புகிறேன்," எனத் தெரிவித்துள்ளார்.

மூன்று இடங்களில், உடன் சென்ற பெப்பருக்கு பால் ஊட்டும் இடவசதி வழங்கப்பட்டது. இதில் ஒன்றை பிரத்தியேகமாக பாலூட்டலுக்காக வழங்கினர். இதன் போது, அவர் மூன்றாவது மற்றும் கடைசி அலைப்பகுதியில் துவங்கி, நூற்றுக்கணக்கான ஓட்ட போட்டியாளர்களைக் கடந்து வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓஷாவாவில் ஈ - சைக்கிள் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

கனடாவின், ஓஷாவாவில் ஈ-சைக்கிள் மற்றும் ஒரு எஸ்.யூ.வீ SUV வாகனம் மோதியதில், 50 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என டர்ஹாம் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்த விபத்து, ஹார்மனி வீதி வடக்கு, ஸ்டோரி அவென்யூவிற்கும் அருகே, ராஸ்லண்ட் வீதி ஈஸ்ட் பகுதியின் வடக்கே இடம்பெற்றுள்ளது.

தெற்கே சென்ற ஈ-சைக்கிள், இடப்பக்கம் திரும்ப முயன்ற வடக்கே வந்த பியூயிக் என்கோர் வகை SUV வாகனத்துடன் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மின்சைக்கிள் ஓட்டியவர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்தார்.

வாகன சாரதி சம்பவ இடத்திலேயே இருந்தார் எனவும் விசாரணையில் முழுமையாக ஒத்துழைத்தார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.







## தனது 87 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

“மொழியும் பண்பாடும் தொடர வேண்டும். அதற்காகவே நான் மீண்டும் படிக்கத் தொடங்கினேன்,” என பெருமையாக ஃப்ரசர் கூறுகிறார்.

தன்னுடைய பிறமொழியான ‘பிளெயின்ஸ் க்ரீ’ மொழியை காப்பது என்ற ஆர்வம், இன்று பலனளித்துள்ளது என தெரிவித்துள்ளார்.

சாஸ்கச்சுவான் பல்கலைக்கழகத்தின் Indian Teacher Education Program (ITEP) இல், இவரே இந்த ஆண்டு பட்டம் பெற்ற மூத்த மாணவியாக இருக்கிறார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக ஆசிரியராக மாறும் கனவின் பின் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருந்தார்.

தன்னால் இன்னும் நம்ப முடியவில்லை. கையில் பட்டம் கிடைக்கும் வரை நிஜமா என்பது உணர முடியவில்லை என இந்த பெருமிதமான தருணத்தில் ஃப்ரேசர் தெரிவித்தார்.



